| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>செந்தமிழ் செல்வன்,<br>த/பெ பெரியசாமி | அ.வ.எண்.233/2022 | 16.06.2026 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. அ.வ.எண்.213/2000 வழக்கில் நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கு பற்றிய விவரங்கள் தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை எனது வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். எனது எதிர்வழக்குரையில் 7 வது பத்தியில் மேற்படி அவ.எண்.213/2000 ம் வழக்கு பற்றிய விவரத்தை சொல்லியுள்ளேன் என்றாலும், மேற்படி விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் சரியல்ல. (சாட்சி தற்போது எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்று சொல்கிறார்)
2. எனக்கு கையொப்பம் போட தெரியும், படிக்க தெரியாது. என்னிடம் எனது வழக்கறிஞரால் எதிர்வழக்குரை படித்து காண்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி எனக்கும், எனது மனைவிக்கும் எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண்.19/2021 in அ.வ.எண்.213/2000 என்ற மனு தாக்கல் செய்திருந்தாரா

என்றால் ஞாபகம் இல்லை.(சாட்சி அனைத்து கேள்விகளுக்கும் ஞாபகம் இல்லை என்ற பதிலை மட்டுமே சொல்கிறார்). மேற்படி மனுவில் வழக்கறிஞர் வைத்து எதிருரை தாக்கல் செய்து கட்சி செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி மனுவில் எனக்கு எதிராக சிவில் அரஸ்ட் உத்தரவு ஏற்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை, அதனை பற்றி எனது மனைவிக்கு தான் தெரியும். மேற்படி உத்தரவிற்கு செலவு தொகையை செலுத்த தயாராக இருந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

3. எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை விசாலாட்சி என்பவரிடமிருந்து 1999ம் ஆண்டு கிரையத்திற்கு வாங்கினேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. மேற்படி கிரையப் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் இனிமேல் தான் தாக்கல் செய்ய வேண்டும். இதுவரை தாக்கல் செய்யாமைக்கு காரணம் உள்ளதா என்றால் அ.வ.எண்.213/2000ம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி கிரையப்பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் தான் சொத்தின் அளவு தெரியும் என்றால் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் உண்மையான அளவு தெரிந்துவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 07.07.2026 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**
**செந்தமிழ் செல்வன்**

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**இலால்குடி.**